# கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்தனர் !

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 05 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 14 இதழ் 163
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30 — 07 — 1993

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகளின் யாதுகாப்பிலுள்ள 33 யுத்தக் கைதிகளும் நேற்றுக் காலை 10-50 மணிக்கு திட்டமிட்டபடி தமது உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பித்தனர்.
நேற்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு நீர் அருந்தி தாம் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பதாகவும் இதற்குள் தம்மை

(4-ம் பக்கம் பார்க்க)

## சுப்பசோனிக் தாக்குபற்றி எதுவும் தெரியாதாம்

### ராணுவ அதிகாரி கைவிரிப்பு

(கொழும்பு)
யாழ். நகர் மீது சுப்பசோனிக் விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று இராணுவ சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் விமானத் தாக்குதல் நடைபெற்றதும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ● கிளாலிக் கடலில் பயணிகள் படகுகள் மீது

# கடற்படை கோரத்தாண்டவம்

# பொதுமக்கள் பலர் துடிதுடித்துப் பலி

## இதுவரை 8 சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
கிளாலி நடுக்கடலில் நேற்று அதிகாலை 4-00 மணியளவில் சிறிலங்கா படையினர் நடத்திய கோரத்தாண்டவத்தில் பொதுமக்கள் பலர் துடிதுடித்துப் பலியானுர்கள். எட்டுப்பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் ஆலங்கேணி துறையிலிருந்து இரண்டு படகுகளில் கிளாலிநோக்கி பயணம்செய்து கொண்டிருந்த பயணிகளை நடுக்கடலில் வைத்து வழிமறித்த படையினர் துப்பாக்கியால் சுட்டும், கிரனைட் மற்றும் ஷெல் தாக்குதல் மேற்கொண்டும் கோரமாகத் தாக்கினர்கள்.
இத்தாக்குதலினுல் படகுகளில் வந்தவர்களில் பலர் பலியானர்கள் - பலர் காயமடைந்தனர். இலர் கடலில் குதித்து தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இறந்தவர்களில் பலரது சடலங்கள் துப்பாக்கிச்சூட்டுக

(4-ம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காணப்பட்ட சடலங்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)
கிளாலி சம்பவத்தில் பலியாகி யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காணப்பட்ட சடலங்கள் வருமாறு:
ஏரம்பமூர்த்தி அசோகன் (34 வயது) கொண்டாவில், யோசப் யேசுராசா யேசுநாய

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரிபடகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## படுகாயமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)
கிளாலி கடலில் படகுகள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினுலும், கிரனைட் தாக்குதலினுலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் ஏழு பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
அவர்களின் விபரம் வருமாறு- மகாலக்சுமி - சபாநாதன் (வயது 53) செட்டித்தெரு நல்லூர், ஜெயந்தி கதிர்காமநாதன் (வயது 31) உரும்பராய் இந்துக்கல்லூரி லேன், கே. பூமணி (வயது 50) அச்சுவேலி, கே. ஜெயந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## இருவரை கடற்படை பிடித்தது

(யாழ்ப்பாணம்)
"எங்களுடன் வந்த பயணிகள் பலரைப் படையினர் சுட்டுக்கொன்றபின் இரு இளைஞர்களையும் பிடித்துச் செல்லும்போது காயமடைந்த எங்களையும் அவர்களுடன் கொண்டு செல்லுமாறு படையினரிடம் குழறியவாறு கூறினேன். எங்களைப் போ, போ எனத் தமிழில் கூறிவிட்டுப் படையினர் சென்றுவிட்டனர்''
இவ்வாறு கிளாலி சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள உரும்பராய் இந்துக் கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த கதிர்காமநாதன் ஜெயந்தி (வயது-

(4-ம் பக்கம் பார்க்க)

## 'பயணிகளை சுட்டபின்னர்

# படகுக்கு பெற்றோல் ஊற்றி படையினர் தீ மூட்டினர்''

(யாழ்ப்பாணம்)
"படகுகளை சுற்றி வளைத்த படையினர் பயணிகளில் பலரை சுட்டுக் கொன்றுவிட்டு இறந்தவர்களது சடலங்கள் மற்றும் குற்றுயிராக கிடந்தவர்கள் மீது பெற்றோலை ஊற்றி தீமூட்டி எரித்தனர்''
இவ்வாறு நேற்று அதிகாலை கிளாலி கடலில்நடந்த பயங்கரச் சம்பவத்தில் உயிர் தப்பிய யாழ்நல்லூரைச்சேர்ந்த திருமதி மகாலஷ்மிசபாநாதன் (53 வயது) அழுகையினூடே தெரிவித்தார்.
இச்சம்பவத்தில் இவரது கணவரான எஸ். சபாரத்தினம் என்பவரும் படையினராற் சுட்டுகொல்லப்பட்டார். பெரும் சோகத்துடன் தமக்

(2-ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிக்கு மக்கள் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)
கிளாலி படுகொலைச் சம்பவம் பற்றி அறிந்தகுடாநாட்டு மக்கள் நேற்று நண்பகல்முதல் இரவு வரை யாழ். ஆஸ்பத்திரியின் உள்ளேயும் வெளியேயும் பெருமளவில் குழுமிய வண்ணமிருந்தனர்.
நண்பகல் 9 சடலங்கள் ஆஸ்பத்திரி பிரேத அறையில் கொண்டு வந்து வைக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## காணுமற்போன படகோட்டிகள்

(யாழ்ப்பாணம்)
கிளாலி கடலில் இடம்பெற்ற கடற்படையின்தாக்குதல் சம்பவத்தின் போது காணுமற் போன படகோட்டிகளின் விபரம் வருமாறு:
சூரி (24 வயது) குருநகர், ஆரோக்கியநாதர் இன்பம் (23 வயது) மண்டைதீவு, செல்லத்தம்பி யோகநேசன் (22 வயது), சந்திராம்பிள்ளை ருபேர்ட் (25 வயது) மண்டைதீவு. (இ)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு உறவினர் விரைவு

(சாவகச்சேரி)
கிளாலி படகு படுகொலை சம்பவத்தைக் கேள்வியுற்ற பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சாவகச்சேரி அரசினர் மருத்துவமனைக்கு நேற்று படையெடுத்தனர்.
யாழ் குடாவின் பல பகுதிகளிலிருந்தும் இவர்கள் மேற்படி மருத்துவ மனைக்கு பெரும் திரளாகச் சென்றனர்
(155-இ)

## மீனவர் இருவர் மீது கடற்படை தாக்கு

(நெல்லியடி)
மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடிப்படகினை வழிமறித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அதில் பொருத்தப்பட்டிருந்த எஞ்ஜினை கழற்றித் தருமாறு வற்புறுத்தியபோது அதற்கு மறுத்த மீனவர் இருவரும் தாக்குதலுக்கு ஆளாகினர்கள்.
இச்சம்பவம் நேற்றுக் காலை பருத்தித்துறை சக்கோட்டைக் கடலில் நடைபெற்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளைதிருப்பி அனுப்ப சுவிஸ் இலங்கையுடன் ஒப்பந்தம்செய்துகொள்ளு

(கொழும்பு)
சுவிட்சர்லாந்தில் அகதி அந்தஸ்து பெருதவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது பற்றி இலங்கையும்-சுவிஸ்சும் ஒரு உடன்படிக்கை செய்யவிருப்பதாக ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

கடவுளை எப் பெயர் கொண்டழைத்தாலும் அவரிடம் கடவுளின் குணங்கள் இருக்கும் போது நாம் அவரை வணங்க வேண்டும்.

— சாந்திமகான்

# கவிழும் நிலைக்கு தள்ளப்பட்ட ராவ் அரசு இறுதிநேரத்தில் வெற்றிபெற்றுவிட்டது

(புதுடில்லி)

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசுக்கு ஏற்பட்ட கத்தியிலிருந்து அது நேற்று முன்தினம் தப்பிக்கொண்டது. எப்படியும் கவிழும் நிலைக்கு தள்ளப்பட்ட அரசு கடைசிநேரத்தில் சில உறுப்பினர்களின் தயவினால் உயிர்பெற்றுவிட்டது.

இந்திராகாங்கிரஸ் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக 251 வாக்குகளும், பிரேரணைக்கு எதிராக 265 வாக்குகளும் கிடைத்தது ஒரு அதிர்ஷ்டவசமானது என்றே கூறவேண்டும்.

இறுதிநேரத்தில் திரு. அஜீத்சிங் தலைமையிலான ஜனதாதள் உறுப்பினர்கள் ஏழு பேர் அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று அரசுக்கு ஆதரவு நல்கினர். இவர்கள் இப்படி பிரியாது இருந்திருந்தால் வாக்குகள் ஒவ்வொரு பகுதியினருக்கும் தலா 258 கிடைத்து ஒரு சமநிலை ஏற்பட்டிருக்கும்.

காங்கிரஸ் — 248, ஜனதாதள் அஜீத்சிங் பிரிவிலிருந்து வெளியேறியோர் — 7, ஜார்ஜ்கண்ட் முக்தி மோர்ச்சா — 4, சிறு கட்சிகள் — 4, நியமன உறுப்பினர்கள் — 2. இப்படியாக 265 வாக்குகளை அரசு பெற்றதில் திரு. நரசிம்மராவ் அரசு தப்பிப் பிழைத்துக்கொண்டது.

அரசுக்கு ஆதரவாக வாக்கெடுப்பில் கலந்துகொள்ள, கடந்தவாரம் விபத்துக்குள்ளாகிபடுக்கையிலிருந்த செல்வி மம்தா பெனர்ஜி தள்ளுவண்டியில் வந்தவரென்றால், இந்த வாக்கெடுப்பு எவ்வளவு முக்கியமானதாய் இருந்தது என்பதை சொல்லவே வேண்டியதில்லை.

திரு. நரசிம்மராவ் பதவியேற்ற பின் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை வரிசையில் இது மூன்றாவதாகும். 1992 யூலையில் 246 வாக்குகளாலும், 1992 டிசம்பரில் 225 வாக்குகளாலும் நம்பிக்கையில்லா பிரேரணைகளில் வெற்றிபெற்ற காங்கிரஸ் இம்முறை 14 வாக்குகளாலேயே வெற்றியீட்டியுள்ளது.

நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு நடந்து முடிந்ததும் பெரும் பரபரப்பு ஏற்பட்டு குழப்பநிலை ஏற்பட்டது. வாக்குகளை கணக்கெடுக்கும் கொம்பியூட்டர்சாதனம் தவறு விட்டுவிட்டதாகவும் எதிரணியினர் குழம்பியிருந்தனர்.

இதேவேளை குறுகிய வாக்குகள் வித்தியாசத்தில் திரு. நரசிம்மராவ் அரசு தப்பியிருப்பதற்கு பண பலமும் உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்கும் போக்கும்தான் காரணம் என எதிர்க்கட்சிகள் பலகுறை கூறியுள்ளன.

வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுவிட்ட மகிழ்வில் வெளியே வந்த பிரதமர் நரசிம்மராவ், பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், தமது அரசு அரசியலில் மதத்தை ஈடுபடுத்தும் முறைக்கு தடைகொண்டு வருமெனவும், பொருளாதாரக்கொள்கைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் எனவும் கூறினார்.

இதேவேளை நம்பிக்கையில்லாப்பிரேரணை தோல்வி கண்டது செல்வி ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும் என ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளார்.

திரு. வாழப்பாடி ராமமூர்த்தி கூறுகையில், நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க எடுத்தமுடிவு சந்தர்ப்பவாதத்தை செல்வி ஜெயலலிதா தவிர்க்கியுள்ளார் என்றும் தமிழக மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம் விரைவில் கொண்டுவரப்படும் எனவும் கூறினார். (கே-ரி)

## நமது நோக்கு

### கலங்கரை விளக்குகள்!

"மாணவர்களின் உயர்வுக்கு ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக விளங்குவதுடன், சமூகத்தின் கலங்கரை விளக்குகளாகவும் திகழ்கிறார்கள்!" என யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழிற்பயிற்சி நெறிச் சான்றிதழ் வழங்கும் வைபவத்திலே இவ்வாறு குறிப்பிட்டார்.

கலங்கரை விளக்காக ஆசிரியர்கள் திகழ்கிறார்கள் எனப் பாராட்டினார். அல்லது அப்படித் திகழ வேண்டும் என அறிவுரை வழங்கினாரா என்பதுபற்றித் திட்டமாகத் தெரியவில்லை!

வையத்துள் வாழ்வாங்கு வாழ, வாழ்க்கைப் பிரச்சினைகள் அலை மோதும்போது, அவற்றிலிருந்து விடுபட்டு வாழ, எதை எப்படி ஏன் படிக்க வேண்டும் என்று வழிகாட்டுபவர்கள் ஆசிரியர்கள்!

இந்த ஆசிரிய கலங்கரை விளக்குகள் சமூகத்தின் சகலருக்கும் வெளிச்சம் தருகின்றனவா?

இவ்வாண்டு க. பொ. த உயர்தர பரீட்சைக்கு சுமார் ஒன்றரை லட்சம் மாணவர்கள் தோற்றுகிறார்கள். இதிலே ஐந்து சதவீதமானவர்களே பல்கலைக்கழகம் புக உள்ளார்கள்.

இச்சிறு தொகையினருக்காகப் பாட ஆசிரியர்கள், படாத பாடுபட்டு, பரீட்சைக்கு ஆயத்தம் செய்துவிடுகிறார்கள். பாராட்ட வேண்டியது தான்!

ஆனால், மீதி 95 சதவீத மாணவர் பாடசாலையை விட்டு விலகிச் சமூகத்திற் கலந்துவிடுகிறார்கள். இவர்கள் வாழ்க்கைப் புயலைச் சந்திக்கப் போதுமான 'வெளிச்சம்' கொடுக்கப்பட்டுள்ளதா?

அரம்போன்ற கூர்மையான கல்வியைப் பெற்றாலும், வாழ்வுக்கான தொழிலின்றி, சமுதாயத்திலே இசைந்து வாழ்வதற்கான மனப்பாங்கில்லாதவர்களை மரமென்றே வள்ளுவர் உட்படப் பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.

அறிவு, திறன், மனப்பாங்கு — இம்மூன்றும் கல்வியென்ற திரிசூலத்தின் முப்பரிமாணங்களே!

வெறும் பாட போதனையோடு நில்லாது, திறன்களையும், நல்ல மனப்பாங்குகளையும் வளர்ப்பதற்கேற்ற பயிற்சிகளையும், அனுபவங்களையும் பாடசாலை கொடுத்திட வேண்டாமா?

இக்கருத்துக்களை ஆசிரியர்கள் அறியாதவர்களல்லர்!

இவை — இதை நினைவூட்டுவது சுயமதிப்பீட்டிற்கான ஒரு மீட்டற் பயிற்சியே!

## பரு. வைத்தியசாலையில் மயக்கமருந்து தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மயக்கமருந்திற்குப் பெருந் தட்டுப்பாடேற்பட்டுள்ளமையால் நோயாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

நோயாளர்களின் பாதிப்பு பற்றி வைத்தியசாலை அபிவிருத்திச்சபை யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இவ்வைத்தியசாலைக்குத் தேவையான மயக்க மருந்துகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (52-மி)

## எழுதுவினைஞர் பரீட்சையில் இரு ஊழியர்கள் சித்தி

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களில் சிறுபணி செய்வோரை எழுதுவினைஞர் சேவை தரம் இரண்டிற்கு பதவி உயர்த்துவதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இரு ஊழியர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கடந்த வருடம் கொழும்பில் நடாத்தப்பட்ட இப் பரீட்சைக்கு நாடு பூராவுமிருந்து 383 பேர் தோற்றியிருந்தனர் இவர்களின் பெறுபேறுகள் யாவும் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இவ்ஊழியர்களில் ஒருவர் யாழ். செயலகத்திலும் மற்றையவர் வடமராட்சிப் பகுதியிலுள்ள உள்ளூராட்சித் திணைக்களத்திலும் பணிபுரிபவர்களாவர். (71-மி)

## 5 தமிழ் நூல்களுக்கு சாகித்திய பரிசு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு இம்முறை 5 தமிழ் நூல்களுக்கு சாகித்திய பரிசுகளையும் மூன்று நூல்களுக்குச் சிறப்புப் பரிசுகளையும் வழங்கியுள்ளது. சாகித்தியப் பரிசு பெறும் ஒவ்வொரு நூலுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

1991-ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூல்களுக்கான பரிசில்கள் ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறும் சாகித்தியப் பெருவிழாவில் வைத்து ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவினால் வழங்கப்படும்.

சாகித்தியப் பரிசு பெறும் நூல்கள் வருமாறு:

சிறுகதை நூல்: மண்ணின் மக்கள் நூலாசிரியர்: மு. சிவலிங்கம் அட்டாளைச்சேனை(?) பத்தனை.

நாவல் நூல்: அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் நூலாசிரியர்: யாழ்நகர் சோமு (மு. சோமசுந்தரம்) மாத்தளை.

கவிதை நூல்: கவிக்குற்றாலம் நூலாசிரியர்: நாவற்குழியூர் நடராசன் கலாநிதி வே. எஸ் நடராசன் நாவற்குழி.

சிறுவர் இலக்கியம்

நூல்: புள்ளிப் புள்ளிமானே: நூலாசிரியர்: திமிலை மகாலிங்கம் சி. தங்கவேல், மட்டக்களப்பு.

சமூகவியலும், மானிடப்பண்பியலும் நூல்: பண்டைத் தமிழகம் நூலாசிரியர்: கலாநிதி சி. க. சிற்றம்பலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

சிறப்புப் பரிசுகள் நூல்: புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி (இரண்டாம்பகுதி) நூலாசிரியர்: புலவர் நா. சிவபாதசுந்தரனார். தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

நூல்: சிவஞான சித்தித் திறவுகோல்: நூலாசிரியர் பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

நூல்: நாட்டார் இசை இயல்பும் பயன்பாடும் நூலாசிரியர்; கலாநிதி இ. பாலசுந்தரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## லெபனான் மீதான தாக்குதலை நிறுத்த இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை!

(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது தொடர்ந்து குண்டுவீச்சுக்களையும் ரொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டுவரும் இஸ்ரேலை உடனடியாகத் தாக்குதலை நிறுத்துமாறு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

லெபனானில் நேற்று நடந்த தாக்குதலில் மட்டும் 20 பேர் பலியாகியும் 100 பேர் காயம் அடைந்தும் உள்ளனர். இதுவரை 100க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

தொடரும் தாக்குதலினால் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் அகதிகளாக பெய்ரூட் நகரைநோக்கி சென்றுகொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரேலின் இத்தாக்குதல்களை கண்டித்த ஐ.நா. செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, உடனடியாகத் தாக்குதல்களை நிறுத்துமாறும், அகதிகள் மீண்டும் தமது வீடுகளுக்குச்செல்ல அனுமதிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை அவசரமாகக் கூடிய லெபனான் அரசு, வேண்டுமென்றே மக்களை அகதிகளாக்கும் இஸ்ரேலின் செயலை உலக நாடுகள் தலையிட்டு கண்டித்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

ஏற்கனவே இன்று டமாஸ்கஸில் அரபு லீக் அங்கத்துவ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் அவசரமாநாட்டுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஏற்கனவே இஸ்ரேலை கண்டித்ததோடு தாக்குதலை உடன் முடிவுக்குகொண்டு வருமாறு எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (கே-ரி)

## நல்லூரில் மேலும் 30 வீதி விளக்குகள்

(பண்டத்தரிப்பு)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினர் கோவில் சுற்றாடலில் பக்தர்களின் நலன்கருதி 30 மண்ணெண்ணெய் விளக்குகளை மேலதிகமாக நிறுவியுள்ளனர்.

மிகவும் உயரம் குறைந்த இடங்களில் இந்த விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் இவைகளை பாதுகாப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டுள்ளது. -72-இ

## வடக்கு—கிழக்கில் சிவில் நிர்வாகத்தை அரசு ஏற்படுத்தும்

(கொழும்பு)

வடக்கிலும் — கிழக்கிலும் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கொழும்பு மேற்றிராணியார் வண. நிக்லஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள், சமாதானம், பந்தோபஸ்து ஆகியவை சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்கள் குறித்தும் பிரதமர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். (இ)

## நம்புங்கள் இருள் விலகும்

எல்லையில்லாத பெருங்கருணைக்கடல்
எங்கள் குலம்காக்கும்
அல்லல் அறுத்தெமை ஆட்கொளும் வண்ணம்
அசுரர் குலமழிக்கும்
நல்ல பொழுதென நாளை விடிந்திடும்
நம்பிக்கை ஒளிதெரியும்
நல்லை ஆளும் வடிவேல் குமரனை
நம்புங்கள் இருள் விலகும்.

- நெடுந்தீவு லக்ஸ்மன்

★ (இன்று நல்லூர் கந்தன் 7-ம் நாள் உற்சவம்)

யாழ்ப்பாணம்



# கட்டைக்காடு பலாலிமுகாமில் படையினர் பலமாகத்தாக்கினர்

## விடுதலையான மீனவர் தகவல்

(நெல்லியடி)

"மீன் பிடிக்கச் சென்ற எம்மைக் கடலில் பிடித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் எமது கைகளையும், கண்களையும் கட்டி கட்டைக்காடு இராணுவ முகாமில் விசாரணைக்கு ஒப்படைத்துப் பலமாகத் தாக்கினார்கள்"

கடந்த 15-ம் திகதி பருத்தித்துறை நாகர்கோவில் கடற்பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்றவேளை ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்றுக்காலை விடுதலையாகிய மீனவர்கள் இருவர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: நாம் வழக்கம் போல உணவு, உடை போன்றவற்றுடன் இயந்திரப்படகில் தொழிலுக்காக குறித்த கடலுக்குச் சென்றவேளை கடலில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் எம்மைக் கைது செய்தனர்.

நாம் கைது செய்யப்பட்டதும், பலமாகத் தாக்கப்பட்டோம். எம்மிருவரது கைகளையும், கண்களையும் கட்டிய கடற்படையினர் தமது வசப்படகில் எம்மை ஏற்றிக்கொண்டு கட்டைக்காடு இராணுவ முகாமில் ஒப்படைத்தனர்.

புலிகளா எனக் கேட்டு அங்கு எம்மைத் தாக்கினார்கள். அப்பொழுது நேரம் இரவு 8 மணி இருக்கும் அடித்த பின்னர் உணவு தந்தனர். நாம் மறுத்துவிட்டு எம்முடன் கொண்டு சென்ற உணவையே உண்டோம்.

மறுநாள் 16ம் திகதி அதிகாலை காலைக்கடனுக்கு செல்வதற்கு நாம் விரும்பியபோது பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டோம்.

சிலமணி நேரத்தின் பின் மீண்டும் அடி உதை தந்த இராணுவத்தினர் நண்பகல் 12 மணியளவில் ஹெலிக்கொப்டர் மூலம் அங்கிருந்து பலாலி முகாமுக்கு அனுப்பினார்கள். அங்கும் சொல்லொணாத் தாக்குதலுக்கு ஆளானோம். புலிகளின் முகாம்கள் எங்கே உண்டு என்று கேட்டுக் கேட்டுத் தாக்கினார்கள். நாங்கள் எதுவும் சொல்ல மறுத்துவிட்டோம்.

விசாரணையின் பின் சாப்பாட்டுக்கும் பதிலாக போதியளவு அடி, உதை கிடைத்தது. பலாலிமுகாமில் 14 நாட்கள் ஓர் அறையில் நாமிருவரும் அடைத்து வைக்கப்பட்டோம்.

பல் துலக்க சவர்க்காரத் துண்டினைத் தந்து முகம் கழுவ வற்புறுத்துவார்கள் இவ்வேளையில் தான் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மீனவர்கள் இருவரைக் காரைநகர் கடலில் வைத்துக் கைது செய்து எமது அறையில் கொண்டு வந்து அடைத்து வைத்தனர்.

அரியம், ராசன் என அவர்கள் தம் பெயர்களை எம்மிடம் கூறினார்கள்.

இவர்களது முகத்தில் நெருப்பினால் சுட்ட அடையாளங்கள் இருக்கக் காணப்பட்டன.

நாங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையிலிருந்தாலும் இடையிடையே அதனை உயர்த்தி முகாமைப் பார்த்தபோது கண்ணுக்கெட்டிய தூரம் வரை இராணுவத்தின் செயின் புளொக் தயார் நிலையில் நிறுத்தி வைத்திருந்ததை காணமுடிந்தது.

பீச்றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த சவிரிமுத்து ஜேம்ஸ் ராசநாயகம் (வயது-45) பருத்தித்துறை மூன்றும் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வேலாயுதம் சிவம் (வயது-22) ஆகியோர்களே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி விடுதலையாகிய மீனவர்களாவர். (160)

# தொடர்ந்து பதவி வகித்திருந்தால் வடக்குகிழக்கு யுத்தம்முடிந்திருக்கும்

## ஜே. ஆர்.

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் நான் தொடர்ந்தும் இருந்திருந்தால் இன்று வடக்கு கிழக்கு யுத்தம்முடிவுற்றிருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசியபோது இவ்வாறு அவர் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

இந்திய அமைதிப் படையை நான் பதவியிலிருந்தால் திருப்பியனுப்பி இருக்கமாட்டேன். இந்திய இராணுவத்தை இங்கு அழைத்தது சரியோ பிழையோ யுத்தம் முடிவடைவதற்கு முன்னர் அந்தப் படையைத் திருப்பி அனுப்பியது மிகப்பெரிய தவறாகும் என்றார். —இ

### சுப்பசொனிக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் பொதுமக்கள் பலியானது பற்றிய செய்திகள் ஏதும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

### கிளாலிக் கடலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயங்களுடன் காணப்பட்டன. பல சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு இருந்தன. ஒரு இளம் பெண்ணின் சடலம் தலைபிளந்த நிலையில் காணப்பட்டது.

நேற்றுக்காலை இறந்தவர்களின் எட்டு சடலங்களும் காயமடைந்தவர்களில் ஆறுபேரும் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர். (வீ-கி)

### அடையாளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம் (18 வயது) மண்டைதீவு சண்முகம் சபாநாதன் (வயது 58) செட்டித் தெரு நல்லூர், கதிரமலை ஜெயந்தி (வயது 25) அச்சுவேலி.

பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நான்கு பெண்களின் சடலங்கள் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை. (இ)

# ரணில் - ஆயர் கென்னத் இனப்பிரச்னைகுறித்துபேச்சு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை பற்றியும் அதற்கான தீர்வுகள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

கொழும்பு ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆயர் கென்னத் பெர்னாண்டோவை சந்தித்தபோது இனப்பிரச்சினை குறித்து ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஸ)

# க. பொ. த. (உ/த) பரீட்சை விடைத்தாள் வந்துசேர்ந்தது

(திருநெல்வேலி)

எதிர்வரும் 2-ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான காகிதாதிகளும் ஒருதொகுதி விடைத்தாள்களும் நேற்றுக் காலை குமணக் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டு கல்வித் திணைக்கள அதிகாரிகளால் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

பத்துநாட்களுக்கான விடைத்தாள் காகிதாதிகள் நேற்று எடுத்து வரப்பட்டதாகவும் மீதி விடைத்தாள்களும் விரைவில் எடுத்துவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (157)

# மாதகல், இளவாலையில் இராணுவத்திடம் சிக்கிய 12 பேர் விடுதலை

(நெல்லியடி)

மாதகல், இளவாலைப் பகுதியில் சுமார் 11 மாத காலம் இராணுவப் பிடியில் சிக்கியிருந்து விடுதலையான 21 பேர் நேற்றுக் காலை குமணக் கப்பலில் பருத்தித்துறையை வந்து சேர்ந்தனர். இவர்களுடன் பருத்தித்துறை முனைக் கடலில் வைத்து அண்மையில் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்ட இரு மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் விபரம் வருமாறு:

சின்னத்தம்பி- கந்தையா (வயது 80), நாகநாதர்-கதிரவேலு (வயது 70), பீலிப். பிரான்சிஸ் (வயது 33), மனுவல்பிள்ளை ஜெயரட்ணம் (வயது 40), திருமதி ஜெயரட்ணம்- மேரிமரக்கிரெட் (வயது 38), ஜோசெப்-புலேந்திரன் வயது 48), ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வயது 50) சின்னப்பிள்ளை முருகன் (50 வயது), திருமதி ராமன் வள்ளி (வயது 65), வேலன் மாணிக்கம் (வயது 65), பெரியான் வன்னியன் (வயது60), அமிர்தநாதன் கைத்தாம்பிள்ளை (72 வயது), திருமதி ஹென்றி ஞானப்பு, (வயது 78), ஜோன பற்றிக் அன்ரனி (வயது35), நடராசா நந்தகுமார் (வயது 12), (நெடுந்தீவிலிருந்து அழைத்துவரப்பட்டவர்), சிவநேசன் வன்னித்தம்பி (வயது 93), திருமதி சிவானந்தம் தெய்வானை (வயது 54), திருமதி பொன்னம்பலம் சரஸ்வதி (வயது 65), திருமதி அம்பலவாணர் அன்னமலர் (வயது 66), அம்பலவாணர் அமிர்தநாதன் (வயது 42), சுப்பர் முருகேசு (வயது 81).

இவர்களுடன் அண்மையில் முனைக்கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களான சவரிமுத்து ஜேம்ஸ் ராசநாயகம் (வயது 45), வேலாயுதம் சிவம் (வயது 22) ஆகியோரும் வந்தனர். (160-கி)

# மணலாறு தாக்குதலில் ராணுவம் படுதோல்வி தழுவியது

## படை அதிகாரி தகவல்

(கொழும்பு)

மணலாறு ஜனகபுர இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் ஸ்ரீலங்கா இராணுவம் பாரிய தோல்வியையே தழுவிக்கொண்டது.

இராணுவ உயரதிகாரி ஒருவர் இவ்வாறு கூறியதாக நேற்று வெளிநாடாஸ் தெரிவித்தது.

புலிகளின் மேற்படி தாக்குதல் ராணுவத்துக்கு பேரிழப்பெனவும் இடைக்காடு இராணுவ முகாம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலைவிட இது மோசமானதெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இடைக்காடு தாக்குதலில் புலிகள் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை எடுத்துச் சென்றனர்.

ஆனால் மணலாறு தாக்குதலில் அதைவிட அதிகளவு பெறுமதியான ஆயுதங்களை புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் மீது புலிகள் தாக்குதல் மேற்கொள்வர் எனவும் அதனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவேண்டும் எனவும் உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லையென இப்போது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து உயர்மட்ட ராணுவ விசாரணை நடத்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ)

### இருவரை கடற்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

31) என்ற பெண் கூறினார்:

அவர் மேலும் கூறுகையில்: இச் சூட்டுச் சம்பவம் நடக்கும் போது நன்றாக விடிந்து விட்டது. படகைச் சுற்றிச் சுற்றி வந்த படையினர் படகின் மீதும், பயணிகள் மீதும் தூரத்தில் இருந்தவாறே சுட்டபடி வந்தனர். அருகில் வந்ததும் கண்டபடி எங்கள்மீது சுட்டும் குண்டுகளை வீசியும் தாக்கினர்.

குண்டுத் தாக்குதலினாலும் சிலர் இறந்துள்ளனர். எங்களுடன் மூன்று இளைஞர்கள் கிளாலி நோக்கி வந்தனர். அவர்களில் ஒருவரை படையினர் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். மற்றைய இருவரையும் பிடித்துச் சென்றுவிட்டனர்.

நாங்கள் வந்த படகில் சுமார் 20 பேர் இருந்தோம். அதில் 7 பேர் ஆண்கள். மிகுதி பெண்கள். படகு இயந்திரக் கோளாறினால் தத்தளித்தது. படகு என்ஜின் கோளாறினாலும் எண்ணெ இல்லாததாலும் படகை துடுப்பின் மூலமும் ஓட்டிகள் இயக்கினர். இதன் போது பயணிகளுக்கும் ஓட்டிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் நாம் நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கையிலேயே படையினர் திடீரென கண்டபடி சுட்டுக்கொண்டு வந்து எமது படகின் மீது தாக்குதலை நடாத்தினர். கள்படகு பலத்த சேதமுற்ற நிலையில் இறந்த உடல்களுடனும் படுகாயமடைந்தவர்களுடனும் இருக்கையில் வேறொரு படகு வரும் சத்தம் கேட்டு நாம் கத்திக் கூறி உதவிபுரியுமாறு கூவினோம்.

அருகில் வந்த படகுகளில் புலிகள் இருந்தனர். அவர்களே எம்மைமீட்டு கரைசேர்ந்தனர் என்றார். (இ)

### மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

கைப்பட்டகில் வந்த கடற்படை உயரதிகாரியின் நடவடிக்கையினால், உடைமைகளை இழக்கும் முயற்சி கைவிடப்பட்டதென்றும் எனினும் இவர்கள் பிடித்த சுமார் 400 ரூபா பெறுமதியான மீன்களை அவர்கள் அள்ளிச் சென்றனரென்றும் தெரியவருகின்றது.

மாகிளாமணி- ஆனந்தராஜா (வயது 23) ஜோன் பிள்ளை ஜெயலிங்கம் (வயது 19) ஆகிய இருவருமே தாக்குதலுக்குள்ளான மீனவர்களாவர். (160)

### கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நீர் அருந்தாமல் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் யுத்தக் கைதிகள் நேற்று தெரிவித்தார்கள்.

தமது விடுதலைக்கு உரிய நடவடிக்கையை அரசு துரிதகெதியில் எடுக்கும்படி இன்று கொழும்பு செல்லவுள்ள யாழ் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் தாம் ஒரு அறிக்கையை கையளிக்கப்போவதாகவும் கூறிய கைதிகள், இதுவரை தமது விடுதலைக்கு உரிய நடவடிக்கையை எடுக்கும்படி அரச உயர்பீட அதிகாரிகளுக்கும், மதகுருமாருக்கும் எழுதிய கடிதங்களுக்கும் எதுவித பலனும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (வி)

### படுகாயமடைந்தோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 32) பருத்தித்துறை, பொன்னையா திரவமநாதன் (85 வயது) கோப்பாய், எஸ். மாணிக்க சுந்தரம் (வயது 43) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் ஞானேந்திரநாதன் (வயது 5[illegible]) மல்லாகம்.

இதில் சிலர் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கி-[illegible])

### ஆஸ்பத்திரிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோது நூற்றுக்கணக்கான மக்கள் பிரேத அறைக்குச்சென்று தங்கள் உறவினர்கள் யாராவது மரணமடைந்துள்ளார்களா என பார்வையிட எண்ணமிருந்தனர்.

இச்செய்தி எங்கும் பரவியதும் கிளாலி ஊடாக பயணித்தவர்களது உறவினர் மேலதிக தகவல்களை பெறுவதில் ஆர்வம் காட்டியிருந்தனர். (கி[illegible])

### அகதிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உடன் படிக்கைக்கு ஜேர்மனும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றவுடன் அமுல்படுத்தப்படும். இதன் பிரகாரம் ஐரோப்பிய நாடுகளிலும் அகதி அந்தஸ்து பெறாத இலங்கையரை கட்டம் கட்டமாக இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார். (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the Genneral Post Office, Sri Lanka under Licence Number B/10336/B